# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2086/31 - 2018 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.30

*2086/31 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

**மேல் மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, கூட்டுறவுச் சேவையாளர் ஓய்வூதிய நியதிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள திருத்தப்பட்டவாறான விதி**

மேல் மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சேவையாளர் ஓய்வூதிய நியதிச் சட்டத்தின் 23 ஆவது பிரிவின் கீழ் எனக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், மேல் மாகாண மாகாண சபையின் வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் கெஜிடன் லலித் வனிகரத்ன ஆகிய நான், இப்பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் 1698/22 மற்றும் 2011 ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 24 ஆம் திகதியின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள மேல் மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சேவையாளர் ஓய்வூதிய நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டிருக்கும் விதிகளை கீழ்க்காட்டப்பட்டுள்ளபடி திருத்தம் செய்துள்ளேன். இத் திருத்தப்பட்டவாறான விதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாள் தொடக்கம் அமுலுக்கு வரும்.

1. 3 (2) விதிக்குப் பதிலாக கீழ்க் காட்டப்பட்டுள்ள விதி சேர்க்கப்பட்டு அவ்விதி இவ்வாறு திருத்தப்பட்டுள்ளது:

3(2) விதியின் திருத்தம்.

இந்த விதியில் உள்ளடக்கப்பட்டுள்ள காரணங்களுக்கு அமைய இந்த விதி செயற்படுத்தப்பட்ட திகதியின் பின்னர் நிரந்தர சேவையில் சேர்க்கப்பட்டுள்ள சேவையாளர் ஒருவர் மேல் மாகாண கூட்டுறவுச் சேவையாளர் ஆணைக்குழுவினால் தமது சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள திகதி தொடக்கம் 90 நாட் காலத்திற்குள் இந்த விதியின் ஊடாக பணிக்கப்பட்டுள்ள முறைக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1A - PG 4192 — 1407 (2018/08)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*3(3) புதிய விதி உட்படுத்தப்படுதல்.*

*2.* 3 (2) விதிக்குப் பின்னர் 3(3) என கீழ்க் காட்டப்பட்டுள்ள புதிய விதி உட்படுத்தப்படல்.

மேல் மாகாண கூட்டுறவுச் சேவையாளர் ஓய்வூதிய ஆலோசனை முறையில் பங்களிப்பு வழங்குவது தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும் நிலை ஏற்பட்டால் பணிப்பாளர், நிர்வாகக் குழுவின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானம் ஒன்றை எடுக்க முடியும்.

கெஜிடன் லலித் வனிகரத்ன,
மேல் மாகாண வீதி,போக்குவரத்து,
கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம்,
வீடமைப்பு மற்றும் நிர்மாணம்,
தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்,
கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி
தொடர்பான அமைச்சர்.

மேல் மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம்,
வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும்
கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சு.
இல. 204,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

9 - 362

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.